*November 18, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்*

1. வங்கதேசத்தில் கடந்த ஆண்டு மாணவர்கள் போராட்டத்தின் போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக, அப்போது பிரதமராகப் பதவி வகித்த ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதித்து வங்கதேசத்தின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது.
   i. வங்கதேச சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற தியாகிகளின் வாரிகளுக்கு அரசுப் பணிகளில் 30 சதவீத இடஒதுக்கீடு வழங்க எதிர்ப்புத் தெரிவித்து, அந்நாட்டில் கடந்த ஆண்டு ஜூலை 1-ஆம் தேதிமுதல் போராட்டங்கள் நடைபெற்றன. பெரும்பாலும் மாணவர்கள் பங்கேற்ற இந்தப் போராட்டத்தில், போராட்டக்காரர்களுக்கும் காவல் துறைக்கும் கடுமையான மோதல் சம்பவங்கள் ஏற்பட்டன.
   ii. இந்தப் போராட்டங்களால் வன்முறை மூண்ட நிலையில், அங்குள்ள 50 மாவட்டங்களில் 36 நாள்கள் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. இதில் சுமார் 1,400 பேர் கொல்லப்பட்டனர்; 25,000 பேர் காயமடைந்தனர். மாணவர்களை சமாதானப்படுத்த முடியாமலும், நாட்டில் மீண்டும் அமைதியை நிலைநாட்ட முடியாமலும் கடந்த ஆண்டு ஆகஸ்டில் பிரதமர் பதவியை ஷேக் ஹசீனா ராஜிநாமா செய்தார். பின்னர், அவர் ராணுவ ஹெலிகாப்டரில் வங்கதேசத்தில் இருந்து தப்பி இந்தியாவில் தஞ்சமடைந்தார். அவர் இந்தியாவில் எங்குள்ளார் என்ற தகவல் வெளியாக வில்லை.
   iii. வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக தலைநகர் டாக்காவில் உள்ள சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் விசாரணை மேற்கொண்டு வந்தது. பல மாதங்களாக விசாரணை நடைபெற்ற நிலையில், நீதிபதி குலாம் முர்தாசா மஜூம்தார் தலைமையிலான 3 பேர் கொண்ட அமர்வு திங்கள்கிழமை (நவ.17) தீர்ப்பளித்தது.
2. காங்கோ ஜனநாயகக் குடியரசில் உள்ள தாமிரச் சுரங்கத்தில் பாலம் இடிந்து விழுந்து 32 பேர் உயிரிழந்தனர்.
   i. அந்த நாட்டின் தெற்கு மாகாணமான லுவாலபாவில் உள்ள கலாண்டோ சுரங்கத்தில் இந்த விபத்து ஏற்பட்டது.இது குறித்து மாகாண உள்துறை அமைச்சர் ராய்காவும்பா கூறியதாவது:
   ii. அளவுக்கு அதிமானவர்கள் அந்தப் பாலத்தில் சென்றதால் அது சுமை தாங்காமல் இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் 32 பேர் உயிரிழந்தனர்.
   iii. தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக நிலச்சரிவுகள் ஏற்படும் அபாயம் இருந்ததால், அந்த சுரங்கத்துக்குள் யாரும் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதை மீறி சட்ட விரோதமாக தாமிரத் தாதை சேகரிக்கும் கும்பல் அந்த சுரங்கத்துக்குள் அத்துமீறி நுழைந்தது என்றார் அவர்.
   iv. இருந்தாலும், காங்கோவின் சிறிய சுரங்கப் பணிகள் மற்றும் ஆதரவு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், சுரங்கப் பகுதியில் இருந்த பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும், இதனால் பீதியடைந்தவர்கள்

அந்தப் பாலத்தில் ஓடியதால் அது இடிந்துவிழுந்து உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

v. சுரங்கப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் நிறுத்தப்படுவது காங்கோவில நீண்டகாலமாகவே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

vi. மின்சார வாகனங்கள் மற்றும் பிற முக்கிய சாதனங்களில் பயன்படுத்தப்படும் லித்தியம் அயான் பேட்டரிகளைத் தயாரிப்பதற்கு உதவும் கோபால்ட், உலகிலேயே காங்கேவில்தான் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

vii. இது போன்ற தாதுவளம் நிறைந்த காங்கோவின் கிழக்குப் பகுதியைக் கட்டுப்படுத்துவதில் பாதுகாப்புப் படையினருக்கும் ருவாண்டா ஆதரவு பெற்ற எம்23 உள்ளிட்ட ஆயுதக் குழுக்களுக்கும் இடையே நீண்ட காலமாகவே மோதல் நிலவிவருகிறது.

3. அதிகார மாளிகைகளில் இருந்படி ஆட்சி செலுத்திவிட்டு, பதவி பறிபோனதும் மரண தண்டனை விதிக்கப்பட்ட உலகத் தலைவர்களின் வரிசையில் தற்போது வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவும் இணைந்துள்ளார்.

i. உலக அளவில் போர்க் குற்றங்கள், ஊழல், அதிகார துஷ்பிரயோகம், மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட குற்றங்களுக்காக பல தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்கள் தூக்கிலிடப்பட்டுள்ளனர் அல்லது சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் :-

a) **முஷாரஃப்** (பாகிஸ்தான், 2019)
பாகிஸ்தானின் முன்னாள் ராணுவ ஆட்சியாளரான முஷாரஃப் 1999-இல் ஆட்சியைக் கைப்பற்றினார். 2007-இல் அரசமைப்புச் சட்டத்தை இடைநிறுத்தி அவசரநிலை பிரகடனப் படுத்தியதற்காக அவர் மீது தேசத்துரோக வழக்கு தொடரப்பட்டது. நாடு கடந்து துபையில் வசித்துவந்த இவருக்கு இந்த வழக்கில் 2019-ஆம் ஆண்டு மரண விதிக்கப்பட்டது.

b) **சதாம் உசைன்** (2006)
2003-இல் அமெரிக்க படையெடுப்பால் ஆட்சியை இழந்த பிறகு, இவரின் ஆட்சிக் காலத் தின்போது நடைபெற்ற துஜைல் படுகொலை தொடர்பாக மனிதகுலத்துக்கு எதிரான குற்றவாளியாக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

c) **நிகோலே செவுசெஸ்கு** (ருமேனியா, 1989)
ருமேனிய சர்வாதிகாரியான இவர், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் மக்களுக்கு எதிரான குற்றங்களுக்காக ராணுவத்தின் அவசர விசாரணைக்குப் பிறகு மரண தண்டனை விதிக்கப்பட்டு, துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். வெறும் சில மணி நேரங்களே நீடித்த அவரது விசாரணை 24 ஆண்டு கால சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

d) **ஜுல்ஃபிகர் அலி புட்டோ** (பாகிஸ்தான், 1979)
பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான இவர், ஜெனரல் ஜியா உல்-ஹக் ராணுவ ஆட்சியின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு கொலை செய்ய தூண்டியது.

e) **பிரான்சிஸ்கோ மாசியாஸ் குவேமா** (ஈக்குவடோரியல் கினியா, 1979)
ராணுவத்தால் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட இவர், இனப்படுகொலை,

படுகொலைகள், ஊழல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் தூக்கிலிடப்பட்டார். இவரது கொடுங்கோல் ஆட்சியின்கீழ் லட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் அல்லது நாடுகடத்தப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

f) **அட்னான் மெண்டரெஸ்** (துருக்கி, 1961)
துருக்கி முன்னாள் பிரதமரான இவர், ராணுவத்தின் ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு அரசியல் குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டார்.

g) **ஹிடெகி தோஜோ** (ஜப்பான், 1948)
ஜப்பானின் போர்க்கால பிரதமரான இவர், இரண்டாம் உலகப் போரின்போது செய்த குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டார்.

h) **ஐயோன் அண்டோனெஸ்கு** (ருமானியா, 1946)
2-ஆம் உலகப் போரின்போது நாட்டின் பிரதமராக இருந்த இவர், நாஜி ஜெர்மனியுடன் கூட்டு வைத்து யூதர்கள் மற்றும் ருமானிய மக்களுக்கு எதிரான போர்க் குற்றங்களில் ஈடுபட்டதற்காக துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

i) **பெரென்ச் சலாசி** (ஹங்கேரி, 1946)
இரண்டாம் உலகப் போரின் போது ஹங்கேரியின் பாசிச தலைவராக இருந்த இவர், போர் முடிந்ததும் போர்க்குற்றங்கள் மற்றும் தேசத் துரோகத்துக்காக தூக்கிலிடப்பட்டார்.

j) **பெனிட்டோ முசோலினி** (இத்தாலி, 1945)
இரண்டாம் உலகப் போரின் போது இத்தாலியில் சர்வாதிகார ஆட்சி நடத்திய இவர், போர் முடிவில் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, விசாரணையே இல்லாமல் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

k) **பதினாறாம் லூயி** (பிரான்ஸ், 1793)
பிரெஞ்சுப் புரட்சியின்போது ராஜத்துரோகக் குற்றத்துக்காக கில்லட்டின் கருவியால் தலை துண்டித்து கொல்லப்பட்டார்.

l) **முதலாம் சார்லஸ்** (பிரிட்டன், 1649)
பிரிட்டன் மன்னராக இருந்த இவர், உள்நாட்டுப் போருக்குப் பிறகு ராஜத்துரோகக் குற்றச்சாட் டின்பேரில் குற்றவாளியாக்கப்பட்டு, பொதுமக்கள் முன்னிலையில் தலை துண்டித்து கொல்லப்பட்டார்.

4. ரஷியாவு டன் வர்த்தகம் செய்யும் இந்தியா உள்ளிட்ட நாடுகளின் இறக்கு மதி பொருள்களுக்கு கூடுதலாக 500 சதவீத வரி விதிக்கப்போவ தாக டிரம்ப் எச்சரித்துள்ளார்.
5. பாலஸ்தீன தேசம் உருவாக்கப்படுவதை எதிர்க்கும் தனது நிலைப்பாட்டில் துளியும் மாற்றம் இல்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.
   i. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் 20 அம்ச போர் நிறுத்த திட்டம் காஸாவில் கடந்த மாதம் 10-ஆம் தேதி முதல் அமலில் உள்ளது. இஸ்ரேல் பிணைக்கைதிகள், பாலஸ்தீன கைதிகள் பரிமாற்றம், பிணைக் கைதிகள் மற்றும் பாலஸ் தீனர்களின் உடல்கள் திருப்பி ஒப்ப டைக்கப்படுவது என அந்தப் போர் நிறுத்த அம்சங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

   ii. இந்த அமைதித் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம், பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்கு வழிவகுப்பது. இந்தச் சூழலில், போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் காஸாவில் சர்வதேச படையை நிறுத்துவது தொடர்பாக முடிவெடுக்க ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் திங்கள்கிழமை கூடுகிறது.

6. நாட்டின் மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தித் திட்டத்தின்கீழ் (இசிஎம்எஸ்) ரூ.7,172 கோடி முதலீட்டில் 17 புதிய திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
   i. இந்த 17 திட்டங்களின்மூலம், கேமரா மாட்யூல், கனெக்டர்கள், மல்டி-லேயர் பிசிபி (அச்சுப் பலகை), ஆஸிலேட்டர்கள், மின் உறைகள் போன்ற முக்கியமான பாகங்களின் உற்பத்தியில், ஒட்டுமொத்தமாக ரூ.65,111 கோடி மதிப்புக்கு உற்பத்தி நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
   ii. ஜபில் சர்க்யூட் இந்தியா, ஏகுஸ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ், யூனோ மிண்டா, ஏசக்ஸ்சேஃப்டி காம்போ னென்ட்ஸ் இந்தியா, ஜெட்ஃபேப் இந்தியா, டி.இ கனெக்டிவிட்டி இந்தியா, மீனா எலக்ட்ரோடெக் உள்பட முக்கிய நிறுவனங்கள் ஈடுபடும் இந்தத் திட்டங்கள் 9 மாநிலங்களில் செயல்படுத்தப்பட உள்ளன.

7. எகிப்தில் நடைபெற்ற துப்பாக்கி சுடுதல் உலக சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் குர்பிரீத் சிங் (25 மீட்டர் சென்டர் ஃபயர் பிஸ்டல் பிரிவில்) வெள்ளிப் பதக்கம் வென்றார்.

8. ஜப்பானில் நடைபெறும் செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கான டெஃப்லிம்பிக்ஸ் போட்டியில், துப்பாக்கி சுடுதலில் இந்தியர்கள் பதக்கம் வென்றார்.
   i. 10 மீட்டர் ஏர் பிஸ்டல் மகளிர் பிரிவில் அனுயா பிரசாத் 241.1 புள்ளிகளை எட்டி உலக சாதனையுடன் தங்கம் வென்றார். அதிலேயே பிரஞ்சலி பிரசாந்த் துமல் 236.8 புள்ளிகளுடன் 19 வெள்ளியை தனதாக்கினார்.

9. ஏடிபி ஃபைனல்ஸ் ஆடவர் டென்னிஸ் போட்டியில் இத்தாலியின் யானிக் சின்னர், ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸை வீழ்த்தி சாம்பியன் கோப்பையைத் தக்கவைத்துக் கொண்டார்.

10. கர்நாடக மாநிலம் பெலகாவி உயிரியல் பூங்காவில் பாக்டீரியா தொற்றுநோயால் இறந்துள்ள மான்களின் எண்ணிக்கை 31-ஆக அதிகரித்துள்ளது. இது குறித்து விசாரணை நடத்த மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.
    i. பெலகாவியில் உள்ள ராணி சென்னம்மா உயிரியல் பூங்காவில் 'பிளாக்பக்' எனப்படும் 38 அரிய வகை மான்கள் இருந்தன, இதில் கடந்த நவ.13ஆம் தேதி 8 மான்களும், 15-ஆம் தேதி 20 மான்களும் இறந்தன.

11. புதிய வருமான வரிச் சட்டம் 2025-இன் அடிப்படையிலான விதிகள் மற்றும் வருமான வரி (ஐடிஆர்) படிவங்கள் வரும் 2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அறிவிக்கை செய்யப்படும்' என்று மத்திய நேரடி வரிகள் வாரியத் தலைவர் ரவி அகர்வால் தெரிவித்தார்.

12. சென்னை அருகே செம்மஞ்சேரியில் 112 ஏக்கரில் ரூ.301 கோடியில் உலக தரத்திலான விளையாட்டு நகரம் அமைக்க தமிழக அரசு அனுமதி அளித்து அரசாணை வெளியிட்டுள்ளது.

i. இந்த திட்டம் தென்னிந்தியாவில் முதல் முறையாக உருவாகும் மிகப்பெரிய விளையாட்டு மையமாகும். அடுத்த மூன்று மாதங்களில் இத்திட்டம் தொடங்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ii. உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வசதிகளுடன் உருவாகும், இந்த நகரத்தில் கால்பந்து மைதானம், வில்வித்தை மைதானம், துப்பாக்கிச் சுடுதல் மையம், ரோலர் ஸ்கேட்டிங், தடகளம், நீச்சல் உள்ளிட்ட போன்ற சர்வதேச விளையாட்டு வசதிகள் அமைக்கப்படுகின்றன. மேலும், வீரர்கள் தங்கும் விடுதிகள், உள்விளையாட்டு அரங்கம், புல் வெளிகள், சாலைகள், மழைநீர் வடிகால் ஆகியவை உலகத் தரத்தில் உருவாக்கப்படும்.

iii. முக்கியமாக, 13 மீ அகலம், ஒரு கி.மீ. நீளமும் கொண்ட படகு சவாரி வசதி இடம்பெறுகிறது. இது நாட்டில் ஒரு விளையாட்டு வளாகத்தில் முதல்முறையாக உருவாகும். நீர்விளையாட்டு அமைப்பு என்பது சிறப்பு அம்சம்.

iv. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் நீர்வளத்துறை இணைந்து இந்த திட்டத்தை செயல்படுத்துகின்றன. 2023-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட இந்த திட்டம் தற்போது செயல்பாட்டில் முன்னேறியுள்ளது.

v. இங்கு வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்படும் நவீன அமைப்பானது, வெள்ள மேலாண்மைக்கும் பெரிய உதவியாக இருக்கும். இதற்காக செம்மஞ்சேரி மற்றும் நாவலூர் பகுதிகளில் உள்ள குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு, 16.23 கனஅடி, 96.38 அடியாக அதிகரிக்கப்படுகிறது.

vi. புதிய 42 ஏக்கர் குளமும் உருவாக்கப்ப டுகிறது. இதனால் மழைக்கால வெள்ளம் குறைந்து, நிலத்தடி நீர்மட்டமும் உயர்வதற் கான வாய்ப்பு உருவாகிறது. வெள்ள நீரை பக்கிங்காம் கால்வாய் வழியாக பள்ளிக்கரணை சதுப்பு நிலத்துக்கு அனுப்பும் வகையில் 4.1 கி.மீ. நீள மண் வடிகால் மற்றும் கான்கிரீட் கால்வாய்கள் அமைக்கப்படுகின்றன. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துடன் இணைந்து இந்த விளையாட்டு நகரத்துக்கு புதிய மெட்ரோ இணைப்பு வழங்கப்படும்.

vii. மேலும், சாலைகள் உருவாக்கும் பணிகளும் வேகமாக நடைபெறுகின்றன. இந்த விளையாட்டு நகரம் உருவானால், தமிழ் நாட்டின் விளையாட்டு வீரர்கள் சர்வதேச தரத்தில் பயிற்சி பெறும் வாய்ப்பு அதிகரிக்கும். மேலும், சென்னை புதிய உலக விளையாட்டு மையமாக உருவெடுக்கும் விளையாட்டு நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

13. மத்திய மாநில அரசுகளுக்கு இடையே வரிகள் பகிர்ந்தளிக்கும் கொள்கையை உருவாக்கும் பொறுப்பை உடைய 16- ஆவது நிதிக் குழுவின் அறிக்கை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவிடம் சமப்பிக்கப்பட்டது.

i. மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் இருந்து மாநிலங்களுக்கு எவ்வளவு நிதி மற்றும் மானியங்களை ஒதுகீடு செய்ய வேண்டும் என்பதற்கான புதிய அளவுகோல்களை இந்த அறிக்கை வரையறுக்கும்.

ii. 2026-27-ஆம் ஆண்டு முதல் அடுத்த 5 ஆண்டுகளுக்கு இந்த அறிக்கை அமலுக்கு வரவுள்ளது. 16-ஆவது நிதிக்குழுவின் தலைவர் அரவிந்த் பனகாரியா மற்றும்

பிற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரை அவரது இல்லத்தில் சந்தித்து அறிக்கையைச் சமர்ப்பித்தனர்.

iii. முன்னதாக என்.கே. சிங் தலைமையிலான 15-ஆவது நிதிக் குழு 2021-22 முதல் 2025-26 வரையி லான 5 ஆண்டு காலத்துக்கு மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 41 சதவீதத்தை மாநிலங்களுக்குப் பர்த்தனிக்க பரிந்துரை செய்திருந்தது. இது 14 ஆவது நிதிக் குழு பரிந்துரைத்த அதே பங்கிட்டு விகதமாகும்.

iv. நிதிக் குழு என்பது மத்திய-மாநில அரசுகளின் நிதி உறவுகளுக்குச் சட்டபூர்வமான ஆலோசனைகளை வழங்கும் அரசமைப்புச் சட்ட அமைப்பாகும். 16- ஆவது நிதிக் குழு, கடந்த 2023- ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி உருவாக்கப்பட்டது. இதில் ஓய்வு பெற்ற அதிகாரியான ஆனி ஜார்ஜ் மேத்யூ, பொருளாதார நிபுணர் மனோஜ் பாண்டா ஆகியோர் முழு நேர உறுப்பினர்களாகவும், எஸ்பிஐ குழுமத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் சௌம்யகாந்தி கோஷ், ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் டி.ரபி சங்கர் ஆகியோர் பகுதி நேர உறுப்பி னர்களாகவும் உள்ளனர்.

v. வரிப் மாநிலங்களுக்கான பகிர்வு விகிதத்தைத் தீர்மானிப்பதற்கு முன், இந்தக் குழு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிர தேசங்களுக்குச் சென்று, அவற்றின் நிதி நிலைமைகளை விரிவாக ஆய்வு செய்தது.

vi. பொதுவாக, மக்கள் தொகை, பரப்பளவு, மக்கள்தொகை செயல்பாடு, நிதி முயற்சி, வருமான இடைவெளி மற்றும் வனப்பரப்பு போன்ற காரணிகளின் கூட்டுச் சராசரி அடிப்படையில் மாநிலங் களுக்கான வரிப் பங்கீடு நிதிக் குழுவால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால், மக்கள்தொகையைக் குணக்கீட்டுக்கான முக்கிய அளவு கோலாகப் பயன்படுத்துவதால், மக்கள்தொகையைக் கட்டுப்படுத் துவதில் வெற்றிகண்ட தென் மாநி லங்கள் பாதிக்கப்படுவதாக நீண்ட காலமாகப் புகார் எழுப்பப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

14. மேக்கேதாட்டு அணைத் திட்டத்துக்கு வழங்குவதை விரைவுபடுத்துமாறு மத்திய நீர் ஆணையத்துக்கு உத்தர விடுமாறு பிரதமர் மோடியைச் சந்தித்து கர்நாடக முதல்வர் சித்தராமையா மனு அளித்தார். பிரதமருடனான சந்திப்புக்குப் பிறகு புது தில்லியில் செய்தியாளர்களிடம் முதல்வர் சித்தராமையா கூறியதாவது:

i. உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி காவிரியிலிருந்து தமிழகத்துக்கு ஆண்டுக்கு 177.25 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும். நிகழாண்டில் அதிக அளவில் தண்ணீரை தமிழகத்துக்கு திறந்துவிட்டுள்ளோம்.

ii. காவிரியின் குறுக்கே மேக்கேதாட்டில் அணை கட்டினால், அதில் 86 டி.எம்.சி. தண்ணீரை தேக்கிவைக்க முடியும். இது தமிழகத்துக்கு உதவியாக இருக்கும். மேலும், பெங்களூருக்கு குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தரவும், மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் மேக்கேதாட்டு அணையைக் கட்டும் தேவையுள்ளது. இந்தத் திட்டத்துக்கு அனுமதி அளிக்குமாறு பிரதமர் மோடியை கேட்டுக் கொண்டுள்ளோம் என்றார் அவர்.

P.L. RAJ IAS & IPS ACADEMY
SINCE : 2006
MAKING YOU SERVE THE NATION